பாரதிய ஜனதா கட்சி - தமிழ்நாடு
BHARATIYA JANATA PARTY, TAMILNADU
Phone : 2435 9600, 2434 3444, 2432 7373 Fax : 044 - 2432 1771

Dr. தமிழிசை சௌந்தரராஜன்
மாநிலத் தலைவர்

01.02.2019

## பத்திரிக்கை செய்தி

இன்று மத்திய அரசின் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அனைவருக்கும் வசதியான வருமானம், அனைவருக்கும் வசதியான வாழ்க்கை. அதே நேரம் தன்மானத்துடன் தொழில் புரிந்து ஓய்வு காலத்தையும் தன்மானத்துடனும், வருமானத்துடனும் செலவழிக்கும் அளவிற்கு வழிவகை செய்யும் பட்ஜெட். விவசாயிகள், பெண்கள், அங்கன்வாடி பணியாளர்கள், இளைஞர்கள், சிறுகுறு தொழில் முனைவோர்கள், அமைப்பு சாரா தொழில் பிரிவுகள் என எல்லா பிரிவுகளுக்கும் பயன் தரும் பட்ஜெட்டாக இது அமைந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல வருமான வரியால் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 5 லட்சம் வரை வரி விலக்குமட்டுமல்ல. 6½ லட்சம் வரை வரி விலக்கு பெறலாம் என்ற சூழலும், கல்விக் கடன் போன்றவைகளுக்கு வரிசலுகை வரவேற்கத்தக்கவை. பெண்களுக்கு பேறுகால விடுப்பு 26 மாதங்கள் என்பது வருங்கால சந்ததியினர் ஆரோக்கியமானதாகவும், உறுதியாக மிகப்பெரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்.

சிறிய தெருவோரக் கடை வைத்திருக்கும் சகோதர, சகோதரிகளுக்கும் கூட ஓய்வூதியம் ரூ.3000 வரை பெறும் திட்டம் வயது முதிர்ந்த காலத்திலும் அவர்களின் வாழ்க்கைக்கு பாதுகாப்பளிக்கும் மிகப்பெரிய திட்டமாகும். நாட்டில் 21வது AIIMS பிரதமரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்கு ரூ.3000-ம் கோடி போன்ற அறிவிப்புகள் இந்த நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்று நினைக்கும் ஆரோக்கிய பட்ஜெட்.

இந்த அரசு 3 லட்சம் கோடி வாராக்கடன் வசூலிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு வருடத்திற்கு ரூ.6000 என்பது அவர்களுக்கு மிகுந்த ஆதரவாக இருக்கும் என்பதும், 12 கோடி விவசாயிகள் பலன் பெறுகிறார்கள் என்பது பசுமை புரட்சிக்கு வித்திட்டிருக்கிறது இந்த பட்ஜெட். பசுவைப் பாதுகாத்து பால் உற்பத்தியை பெருக்க வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டிருக்கிறது இந்த பட்ஜெட். மீன் வளத்திற்கு தனி அமைச்சர்கள் என்று நீர் புரட்சிக்கு வித்திட்டிருக்கிறது இந்த பட்ஜெட்.

ஆக தொழில் புரட்சி, பசுமை புரட்சி, வெண்மைப் புரட்சி, நீர் புரட்சி என்று அனைவர் வாழ்க்கையையும் வண்ண மயமாக்கும் வண்ணம் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் புரட்சி பட்ஜெட் இது!

இந்த பட்ஜெட் 2019-லும் மோடியே மீண்டும் வருவார் எனவும் நல்ல திட்டங்கள் தொடரும் என்பதை வலியுறுத்துகிறது.

மீண்டும் மோடி வேண்டும் மோடி

என்றும் மக்கள் பணியில்

தமிழிசை சௌந்தரராஜன்

(Dr. தமிழிசை சௌந்தரராஜன்)